தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 3, பார்த்திப – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஜனவரி 16, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதுஒன்று இல்"

உயர்ந்த பெரும்புகழ் அல்லாமல், நிலையற்ற இந்த உலகத்தில் ஒப்பற்ற ஒரு பெரும் பொருளாக, அழியாமல் நிலைத்து நிற்கக் கூடியது வேறு ஒன்றும் இல்லை.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. தோ.மு. நல்லசாமி அவர்கள் 30–9–2005 அன்றும், திரு. வெ. தமிழரசு அவர்கள் 10–11–2005 அன்றும், திரு. எம்.கே. சோமசுந்தரம் அவர்கள் 1–12–2005 அன்றும், திரு. எம். அண்ணாமலை அவர்கள் 1–1–2006 அன்றும் மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தோ.மு. நல்லசாமி அவர்கள், கரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1957 முதல் 1962 வரை, 1962 முதல் 1967 வரை மற்றும் 1967 முதல் 1971 வரை சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

[பேரவைத் தலைவர்] [2006 ஜனவரி 16

திரு. வெ. தமிழரசு அவர்கள், ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1991 முதல் 1996 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம்.கே. சோமசுந்தரம் அவர்கள், அன்றைய திருநெல்வேலி தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 முதல் 1962 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். அண்ணாமலை அவர்கள், அரூர் தனித் தொகுதியிலிருந்து இரு முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு முறையே 1977 முதல் 1980 வரை மற்றும் 1989 முதல் 1991 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும்வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) சென்னை வியாசர்பாடி மற்றும் எம்.ஜி.ஆர். நகர் வெள்ள நிவாரண மையங்களில் கூட்ட நெரிசலில் நேர்ந்த உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சென்னை, வியாசர்பாடி மற்றும் எம்.ஜி.ஆர் நகர் வெள்ள நிவாரண மையங்களில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் நேர்ந்த மனித உயிரிழப்புகள் குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"6–11–2005 அன்று சென்னை, வியாசர்பாடியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலைக் கல்லூரி வெள்ள நிவாரணம் வழங்கும் மையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் 6 பேரும், 18–12–2005 அன்று சென்னை எம்.ஜி.ஆர் நகரில் உள்ள அறிஞர் அண்ணா மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி வெள்ள நிவாரணம் வழங்கும் மையத்தில் ஏற்பட்ட